# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான இலகுவழி மாதிரிப் பரீட்சை - 26


**ஆசிரியர்** : **P.அம்பிகைபாகன்**

**இடம்** : **ACA, ஆசிரியரின் வீட்டில் குழு வகுப்புக்களில்**


**அடைப்பிலுள்ள குறியீடுகளைக் குறிக்கும் எண்கள் மேலிருந்து கீழாக பெருக்கப்படுவதுடன் வலமிருந்து இடமாக கூட்டப்படுகின்றன.**




1. இதன்படி ‘ ? ’ குறியீட்டினால் காட்டப்படும் இடத்தில் வரவேண்டிய எண் யாது?
   1. 8 2. 10 3. 12

**கீழுள்ள குறியீட்டுக் கழித்தலை அவதானிக்கவும்.**




**குறியீட்டுக் கழித்தலின்படி கீழுள்ள குறியீடுகள் குறித்து நிற்கும் பெறுமதியைத் தெரிவு செய்க.**

2. ‘ △ ’ என்பது. 1. 5 2. 10 3. 15

3. ‘ ⊡ ’என்பது. 1. 35 2. 40 3. 45

4. கீழே தரப்பட்டுள்ள உருவில் இரு சில்லுகளும் அம்புக்குறி காட்டிய திசையில் சுழலுமெனின் Cக்கும் Dக்கும் யாது நிகழும்.




   1. C கீழ் நோக்கிச் செல்லும் அதேவேளை D மேல் நோக்கிச் செல்லும்.
   2. Cயும் Dயும் மேல் நோக்கிச் செல்லும்.
   3. Cயும் Dயும் கீழ் நோக்கிச் செல்லும்.

5. கீழே காட்டப்பட்டுள்ள உருவில் பெரிய சில்லு அம்புக்குறியினால் காட்டப்பட்டுள்ள திசையில் சுழலுமெனின், Aக்கும் Bக்கும் யாது நிகழும்.




   1. C கீழ் நோக்கிச் செல்லும் அதேவேளை D மேல் நோக்கிச் செல்லும்.
   2. C உம் D உம் மேல் நோக்கிச் செல்லும்.
   3. C மேல் நோக்கிச் செல்லும் அதேவேளை D கீழ் நோக்கிச் செல்லும்.

ஒரே நாளில் Aக் கடிகாரம் காட்டுவது முற்பகல் எனவும், Bக் கடிகாரம் காட்டுவது பிற்பகல் எனவும், கருதி இரு கடிகாரங்களுக்கு மிடையிலான கால அளவைத் தெரிவு செய்க.

A B

6.  
   1. 16 மணி 30 நிமிடங்கள்
   2. 17 மணி 30 நிமிடங்கள்
   3. 18 மணி 30 நிமிடங்கள்

7.  
   1. 12 மணி 20 நிமிடங்கள்
   2. 12 மணி 25 நிமிடங்கள்
   3. 12 மணி 15 நிமிடங்கள்

8. 

1. 8 மணி 30 நிமிடங்கள்
2. 9 மணி 30 நிமிடங்கள்
3. 10 மணி 30 நிமிடங்கள்

9. 

இம்மூன்று கடிகாரங்களில் சரியான நேரம் காட்டுவது எது?

1. 1     2. 2     3. 3

10. ஒரு மாதத்தின் 5ஆம் திகதி திங்கட்கிழமை ஆயின், அம்மாதத்தின் 15ஆம் திகதி என்ன கிழமை?

1. புதன்கிழமை     2. வியாழக்கிழமை     3. வெள்ளிக்கிழமை

11. ஒரு மாதத்தின் 8ஆம் திகதி சனிக்கிழமையாயின், அம்மாதத்தின் 17ஆம் திகதி என்ன கிழமை?

1. வியாழக்கிழமை     2. வெள்ளிக்கிழமை     3. திங்கட்கிழமை

**வினாக்களுக்குரிய திருத்தமான விடையின் கீழே கோடிடுக.**

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதும் கூண்டில் அடைக்கப்பட்ட கிளிபோல் ஆகினேன்.

12. பின்வருவனவற்றுள் எது கூண்டில் அடைக்கப்பட்ட கிளிபோல் ஆகினேன் என்பதன் கருத்தைத் தருகின்றது.

1. கவனமாகப் பாடங்கள் படிக்க வேண்டிய நிலைக்குள்ளாகினேன்.
2. கடினமான வேலைகள் செய்ய வேண்டிய நிலைக்குள்ளாகினேன்.
3. கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டிய நிலைக்குள்ளாகினேன்.

13. எங்கள் ஆசிரியர் கடினமான விடயங்களையும் எல்லோருக்கும் விளங்கும்படி தெளிவாகக் கற்பிப்பார். இதனை உணர்த்தக் கூடிய உவமைச் சொற்றொடர் எது?

1. ‘இலை மறைகாய் போல்’ மறைவாக
2. ‘ஆற்றில் கரைத்த புளி போல’ பயனற்று
3. ‘உள்ளங்கை நெல்லிக் கனிபோல’ தெளிவாக

**வினாக்களுக்குரிய திருத்தமான விடையின் கீழே கோடிடுக.**

அகமட், மதன், சுதன், இராமன் ஆகியோர் ஒரு பரீட்சைக்குத் தோற்றினார்கள். சுதனை விட இராமன் பத்து புள்ளிகள் கூடுதலாகப் பெற்றதுடன், மதன் அகமட்டை விட இருபது புள்ளிகள் குறைவாகப் பெற்றிருந்தான். சுதனும் மதனும் சமமான புள்ளிகளைப் பெற்றிருந்தார்கள்.

14. இதன்படி ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றது யார்?

1. மதன்     2. இராமன்     3. அகமட்

15. இராமன் பெற்ற புள்ளிகள் 49 எனில், மதன் பெற்ற புள்ளிகளின் எண்ணிக்கை யாது?

1. 34     2. 39     3. 44

16. A, B எனும் இவ்விரு படங்களுக்கிடையில் ஆறு வித்தியாசங்கள் உண்டு. அதனை இரண்டாவது படத்தில் வட்டமிட்டுக் குறித்துக் காட்டுக.

A 

B 

**பின்வரும் வாக்கியங்களை ஒழுங்கு முறையாக எழுதினால், ஒரு கதை உருவாகும். சரியான ஒழுங்கில் உள்ள இலக்கங்கள் கொண்ட விடையின் கீழ்க் கோடிடுக.**

16.
1. அதிக நேரம் ஆகியும் பேரூந்து வருவதாகத் தெரியவில்லை.
2. தரிப்பிடத்திலிருந்து சிறிது தூரம் நடக்கவும் பேரூந்து அவளைக் கடந்துசென்றது.
3. கமலா பாடசாலைப் பையுடன் பேரூந்து தரிப்பிடம் சென்றாள்.
4. கமலா பொறுமையிழந்து பாடசாலைக்கு நடந்து செல்லத் தீர்மானித்தாள்.
5. அவள் தனது அவசரப் புத்தியை எண்ணிக் கவலைப்பட்டாள்.

1. 2, 1, 4, 5, 3     2. 3, 1, 4, 2, 5     3. 2, 1, 4, 3, 5

17.
1. பாடசாலைச் சிறுவர்கள் அச்சேற்றில் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.
2. சிறுவர்கள் மறுநாள் நீர்ச்சிரங்கினால் அவதிப்பட்டார்கள்.

3. பாடசாலைக்குப் பக்கத்தில் ஒரு ஆலமரம் நின்றது.
4. அவ்வழியே சென்ற வழிப்போக்கர் அவர்கள் செயலைப் பார்த்து அருவருத்தார்.
5. ஆலமரத்தின் கீழ் சேறும் சகதியுமாகக் காணப்பட்டது.

1. 2, 1, 4, 5, 3     2. 3, 1, 4, 2, 5     3. 3, 5, 1, 4, 2

**பொருத்தமான சொல்லைத் தொடர்புபடுத்துக.**

18.

| | |
|---|---|
| 1. பௌத்த குரு | 1. மௌலானா |
| 2. இந்துக் குரு | 2. திருத்தந்தை |
| 3. முஸ்லீம் குரு | 3. பிக்கு |
| 4. கிறிஸ்தவக் குரு | 4. அந்தணர் |

19.

| | |
|---|---|
| 1. மீன் பிடிப்பவர் | 1. கொல்லர் |
| 2. உடை செய்பவர் | 2. தச்சர் |
| 3. கத்தி செய்பவர் | 3. கடற்றொழிலாளி |
| 4. கதிரை செய்பவர் | 4. நெசவாளி |

**கீழுள்ள கணிப்புக்களில் எல்லாக் குறியீடுகளும் 10இற்கு உட்பட்ட முழு எண்களைக் குறிக்கின்றன.**

□ + □ = ○
□ x □ = △
△ - □ = ○

20. □, ○, △ என்பனவற்றின் பெறுமதிகளைச் சரியாக குறிக்கும் விடையின் கீழ்க்கீறிடுக.

1. 2, 4, 6     2. 3, 6, 8     3. 3, 6, 9

21. தரம் 5 புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சையொன்று நடைபெற்ற கால அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது. அட்டவணையில் சில அடைப்புக்கள் அழிந்துவிட்டன. அவற்றை வெற்று அடைப்புக்களில் இட்டு பூரணமாக்குக.

| | ஆரம்பித்த நேரம் | முடிவுற்ற நேரம் | செலவாகிய காலம் |
|---|---|---|---|
| வினாத்தாள் 01 | 09.15 am | .................. | 45 நிமிடம் |
| இடைவேளை | .................. | 10.30 am | 30 நிமிடங்கள் |
| வினாத்தாள் 02 | 10.30 am | .................. | 1மணி 15 நிமிடங்கள் |

**பாடலை வாசிக்கவும்.**

பச்சைக் கிளியே வா வா வா
பாலும் சோறும் உண்ண வா
கொச்சி மஞ்சள் பூச வா
கொஞ்சி விளையாட வா

பாலும் எனக்குத் தேவையில்லை
பழமும் எனக்குத் தேவையில்லை
சோலை எங்கும் கூவிநிதம்
சுற்றித் திரிதல் போதுமப்பா!

**பாடல்களை கவனமாக வாசித்தபின் வினாக்களுக்கு விடை எழுதவும்.**

22. இப்பாடல்களில் முதலாவது பாடல் சிறுவர்களால் பாடப்பட்டது.
இரண்டாவது பாடல் யாரால் பாடப்பட்டது? ..........................................................................

23. பச்சைக்கிளி பால், பழத்தை விட எதைக் கூடுதலாக விரும்புகின்றது?
..........................................................................

24. கூண்டில் அடைக்கப்பட்ட பச்சைக்கிளி சந்தோஷமாக இருக்குமா அல்லது கவலையாக இருக்குமா? ..........................................................................

25. சிறைக்கூண்டில் அடைக்கப்பட்ட மனிதன் சந்தோஷமாக இருப்பானா அல்லது கவலையாக இருப்பானா? ..........................................................................

**சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

26. கிராமியப் பாடல்களில் வரும் சொற்கள்,
(கடினமானவை, எளிமையானவை)

27. பெரும்பாலான கிராமியப் பாடல்களை பாடியவர்கள்.
(பட்டதாரிகள், பாமரமக்கள்)

28. கிராமங்களில் கூட்டங்கூட்டமாக வேலை செய்யும் போது கிராமமக்கள் பாடிய பாடல்கள்,
(பாரதியார் கவிதைகள், நாட்டார் பாடல்கள்)

29. குழந்தைகளை உறங்க வைப்பதற்காக பாடப்படும் கிராமியப் பாடல்.
(தாலாட்டுப்பாடல், வில்லுப்பாட்டு)

**விடுகதைகளுக்கான விடைகளைத் தருக.**

30. ஓடியாடி வேலை செய்வான். வீட்டு மூலையிலே முடங்கிக் கிடப்பான். அவன் யார்?
..............................................................................

31. காடுமேடு எல்லாம் எம்மைத் தூக்கிச் செல்வான். வீட்டுக்கு வந்தால் வாசற்படியில் ஒதுங்கி நிற்பான். அவன் யார்? ..............................................................................

32. நடு வீட்டுக்குள் இருந்து உலகத்தை எல்லாம் காட்டுவான். அமுக்கி விட்டால் அமைதியாய் இருப்பான். அவன் யார்? ..............................................................................

**இங்கு ஒரு விசித்திர மிருகம் பற்றி கற்பனை செய்யப்பட்டு விமர்சிக்கப்படுகின்றது. அதன் தொடர்ச்சியாக உங்கள் மனதில் தோன்றும் மூன்று வாக்கியங்கள் எழுதி பந்தியை பூர்த்தி செய்யுங்கள்.**

அது ஒரு விசித்திர மிருகம். பின்னங்கால்கள் நீண்டவை. முன்னங்கால்கள் குறுகியவை. முகம் கூரானது. இரண்டு கால்களில் இருந்து முன்னங்கால்களால் முகத்தை தடவிப் பார்க்கும். யாரையாவது கண்டால் நாலு கால்களினாலும் ஓடும். ஓடும்போது அதன் தோற்றம்.........

33. ..............................................................................
34. ..............................................................................
35. ..............................................................................

36.  இவ் வடிவத்தை ஆக்குவதற்கு பொருத்தமான அட்டைக்கீலம் எது?

1. 
2. 
3. 

37.  இவ்வுருவின் அடுத்த நிலை  இதுவானால்  இவ்வுருவின் முதல் நிலை

1. 
2. 
3. 

38. உமது வகுப்பில் பாடம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் உமக்கு அருகில் அமர்ந்திருந்த சகமாணவர் ஒருவர் மயங்கி நிலத்தில் விழுந்து விட்டார். நீர் செய்ய வேண்டியது எது?
1. அவரைக் கவனியாது பாடத்தை கற்பதில் கவனமாக இருக்க வேண்டும்.
2. விழுந்தவருக்கு மேல் கதிரையைத் தூக்கிப் போட வேண்டும்.
3. உடனடியாக ஆசிரியருக்கு நடந்ததைக் கூற வேண்டும்.

39. உமது பைசிக்கிள் ரயர் ஒன்றில் காற்றுப்போய் விட்டது. நீர் செய்யக்கூடியது.
1. மற்றைய ரயரில் உள்ள காற்றில் சிறிதளவை இதனுள் நிரப்ப வேண்டும்.
2. சைக்கிள் கடையில் காசு கொடுத்து காற்றை வாங்கி வர வேண்டும்.
3 சைக்கிள் கடைக்குச் சென்று காற்றை உட்செலுத்த வேண்டும்.

40. சிவப்புச்சாரி உடுத்த வெள்ளை அக்கா கறுத்த காகம் கத்த சகுனம் சரியில்லை என்று ஊதா நிறச்சாரி உடுத்து மஞ்சள் வாங்க பச்சைத் தண்ணியண்ணை கடைக்குப் போய் நீலம் வாங்கி வந்தாள். இவ் வாக்கியத்தில் உள்ள தவறு எது? நிறங்கள் எத்தனை?
1. காகம் கத்தியது, 6
2. பச்சைத் தண்ணியண்ணை கடைக்குப் போனது, 8
3. நீலம் வாங்கியது, 7